இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்

வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை

## மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை - 15.06.2016

### மாநிலத்தின் கடந்தவாரவானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 30°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 30°செ ஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 18°செ முதல் 20°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ முதல் 14°செ ஆகவும் பதிவானது. பொதுவாக தமிழ்நாட்டில் பரவலான மழை பெறப்பட்டது.

### வானிலை முன்னறிவிப்புமற்றும் அறிவுரைகள் (15.06.2016 முதல் 19.06.2016)

#### 1. மேற்கு மண்டலம்

மேற்கு மாவட்டங்களான கோயமுத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். 17.06.16 முதல் 19.06.16 வரை இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32°செ 33°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ 24°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 77 முதல் 79 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 59 முதல் 62 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 17 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

#### வேளாண் அறிவுரை

- ✓ அடுத்து வரும்இரண்டு நாட்களுக்கு வறண்ட வானிலை நிலவுவதால், கார் பருவத்திற்கு நாற்றாங்கால் தயாரித்து முளைக்க வைத்த விதைகளை விதைக்கவும். 17 முதல் 19-ம் தேதி வரை மழை எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, விதைத்த மூன்று நாட்கள் கழித்து தண்ணீரை வடிக்கவும்.
- ✓ 17 முதல் 19-ம் தேதி வரை தூறல் மழை எதிர்பார்க்கப்படுவதால் முப்பது நாட்கள் வயதுடைய மஞ்சளில் கை களை எடுக்கவும்.
- ✓ 17 முதல் 19-ம் தேதி வரை தூறல் மழையே எதிர்பார்க்கப்படுகிறது. எனவே 60 நாட்கள் வயதுடைய பூக்கும் மற்றும் பால் பிடிக்கும் பருவத்திலுள்ள கம்பு மற்றும் சோளம் பயிர்களுக்கு நீர் பாசனம் செய்யவும்.
- ✓ அதிக காலை மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் மற்றும் அதிக காற்றின் வேகம் எதிர்பார்க்கப்படுவதால், கால்நடை மற்றும் கோழிகளுக்கு போதுமான குடிநீர் கொடுக்கவும்.
- ✓ காற்றின் வேகம் 17 கி.மீ அளவுக்கு வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.

#### 2. காவிரி டெல்டா மண்டலம்

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர் அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல் நேர வெப்பநிலையானது37°செ முதல்

38°செ ஆகவும்,குறைந்தபட்ச வெப்பநிலை 27°செ முதல் 30°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 49 முதல் 66 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது.சராசரியாககாற்றின் வேகம் 6 கி.மீ முதல் 17 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ திருந்திய நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள், இரண்டரை சென்ட் நிலத்தில் மேட்டு பாய் நாற்றாங்காலில் 5 கிலோ இரண்டாம் கொம்பு நெல் விதையை சீராக தூவி நாற்று விடவும். முதல் ஐந்து நாள் வரை பூவாளி உதவியுடன் நாற்றாங்கால் நன்கு நனையும்படி காலை அல்லது மாலை வேளைகளில் தண்ணீர் தெளிக்கவும். ஆறாம் நாளிலிருந்து பாய் நாற்றாங்காலைச் சுற்றியுள்ள வாய்க்காலில் நாற்றுப்படுகை நன்கு நனையும்படி தண்ணீரை பாய்ச்ச வேண்டும். நாற்று விட்ட ஒன்பதாம் நாள் மாலை வேளையில் 0.5 சத யூரியா கரைசலை தெளிக்கவும். நாற்று பறிப்பதற்கு இரண்டு நாள் முன்பாக தண்ணீர் பாய்ச்சுவதை நிறுத்த வேண்டும். நாற்றுவிட்ட 14ஆம்நாள் நாற்றுகள் நடவிற்கு தயார் ஆகிவிடும்.
- ✓ குறுவை பருவத்திற்கு நாற்றாங்கால் தயார் செய்யும் போது ஒரு எக்டருக்கான 20 சென்ட் நாற்றாங்காலில் ஒரு டன் தொழு உரம் அல்லது கம்போஸ்ட் இடவேண்டும். கடைசி உழவின் போது நாற்றாங்காலுக்கு 40 கிலோ டிஏபி உரம் அடியுரமாக இடவேண்டும். களிமண் நிலத்திற்கு 4 கிலோ ஜிப்சமும், ஒரு கிலோ டி.ஏ.பி. ஒரு சென்ட் நாற்றாங்காலுக்கு என்ற அளவில் விதைத்த 10 ஆம் நாள் இடவேண்டும். இது வேர் அறுபடாமல் நாற்றுக்களை பறிக்க உதவும்.
- ✓ நாற்றாங்காலில் இலைப்பேன் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த குளோரிபைரிபாஸ் (Chlorpyriphos) (2.5 மிலி /லி) தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

**3. தெற்கு மண்டலம் -1**

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான தூறல் மழைஎதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது 36°செ முதல் 40°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 25°செ முதல் 28°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலைநேரகாற்றின் ஈரப்பதம் 34 முதல் 70 சதவிகிதமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 2 கி.மீ மேுதல் 22 கி.மீவேகத்தில்வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் இலேசான மழையை ஒட்டி இறவையில் பயிரிடப்பட்டுள்ள காய்க்கும் பருவத்திலுள்ள பருத்திக்கு ஒரு எக்டருக்கு தழைச்சத்து 27 கிலோ என்ற அளவில் பாரின் மேற்பகுதியிலிருந்து 3 க்கு 2 பங்கு தொலைவில் இட்டு மூடவும்.
- ✓ தற்போது எதிர்பார்க்கப்படும் அதிகமான மேகமூட்டம் மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலையில் மாவில் இலைகள், காம்புகள் மற்றும் பழங்களில் கருப்பு நிறத்தில் வட்ட அல்லது ஒழுங்கற்ற வடிவத்தில் புள்ளிகள் (பறவை கண் நோய்) தோன்ற வாய்ப்புகள் உள்ளன. இந்நோயினை கட்டுப்படுத்த ஒரு லிட்டருக்கு கார்பன்டசிம் (Carbendazem) 1 கிராம் அல்லது மாங்கோசெப் (Mangozep) 2.5 கிராம் என்ற அளவில் 15 நாட்கள் இடைவெளியில் இருமுறை தெளிக்கவும்.

- ✓ வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் காற்றின் வேகத்தினால் தோட்டக்கால் பயிரில் நீர்பற்றாக்குறை ஏற்பட்டு பயிர் வாட வாய்ப்புகள் உள்ளது. எனவே தேவையான நீர்ப்பாசனம் செய்யவும்.
- ✓ வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் அதிக காற்றின் வேகம் காரணமாக வாழைக்கு மரம் சாயாதவாறு சவுக்கு மர கட்டைகளை கொண்டு முட்டு கொடுக்கவும்.

**தெற்கு மண்டலம் -2**

வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை தேனி,புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். தேனி மாவட்டத்தில் மட்டும் எல்லா நாட்களும் இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. மற்ற மாவட்டங்களில் ஓரிரு நாட்கள் மட்டும் இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது 32°செ முதல் 40°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலையானது 22°செ முதல் 27°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலைநேரகாற்றின் ஈரப்பதம் 48 முதல் 82 சதவிகிமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 12 கி.மீ முதல் 19 கி.மீ வரையிலும் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ மழை பெய்ய வாய்ப்பு இல்லாததால் மண் மற்றும் பயிரின் வளர்ச்சியினைப்பொறுத்து நீர் பாய்ச்ச ஏற்பாடு செய்யலாம்.
- ✓ சொட்டுநீர் பாசனம் மேற்கோள்வதன் மூலம் நீர்த் தேவைகளைக் குறைக்கலாம்.
- ✓ எதிர்பார்க்கப்படும் அதிக காற்றிலிருந்து பாதுகாக்க 5 மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும். முன்பட்ட கரும்பிற்கு விட்டம் கட்டவும்.
- ✓ தோட்டக்கலைப் பயிர்களில் வேர்ப்பகுதயில் ஈரப்பதத்தை பாதுகாக்க தென்னை நார்க்கழிவுகளை கொண்டு மூடலாம்.

**4. மலைப்பிரதேச மண்டலம்**

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலோசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 18°செ ஆகவும்,இரவுநேர வெப்பநிலை10°செஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலை நேரக் காற்றின் ஈரப்பதம் 90 முதல் 92 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 14 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ அறுவடை நிலையில் உள்ள கேரட் பயிரில், தொடர் மழையின் காரணமாக அழுகல் நோய்பரவி வருகின்றது. கட்டுப்படுத்த காப்பர் ஆக்ஸி குளோரைடு (**Copper oxychloride**) ஒரு கிராம் , ஒரு லிட்டர் தண்ணிருக்கு என்ற அளவில் கரைத்து பயிரைச்சுற்றி ஊற்றவும்.
- ✓ மிளகுச்செடிக்கு பருவமழை காலத்தில் 200 கிராம் யூரியா 110 கிராம் சூப்பர் பாஸ்பேட் 110 கிராம் பொட்டாஸ் உரம் இடவும்.

**5.வடமேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும்

நாட்களில் இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 35°செ முதல் 36°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24°செ முதல் 25°செஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 63 முதல் 77 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது.காற்று மணிக்கு 7கி.மீ முதல் 8 கி.மீவேகத்திலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ தென்மேற்கு பருவமழையின் வேகத்தில் சற்றுதொய்வு காணப்படுவதால் மேகமூட்டமும், காற்றுடன் கூடிய வானிலை மட்டுமே நிலவக்கூடும். இத்தொய்வு விரைவில் மறைந்து தென்மேற்கு பருவமழையின் தாக்கம் இரு நாட்களுக்கு பின் மீண்டும் எதிர்பார்க்கப்படுகிறது, இதன் காரணமாக தென்மேற்கு தொடர்ச்சி மலைப்பிதேசத்தை ஒட்டிய மாவட்டங்களில் மழையும், நாமக்கல் போன்ற மழை மறைவு பிரதேசங்களில் சாரல் அளவிலான வானிலை நிலவும், பகல் வெப்பம் சற்றே கூடுதலாக நிலவினாலும் காற்றின் வேகம் காரணமாக கோழிகளில் வெப்ப அயற்சி இருக்க வாய்ப்பில்லை, உயர் மனைகளில் காற்றினால் தீவன விரயம் காணப்படுவதால் பக்கவாட்டில் 3 அடி உயரம் வரை படுதாவை கட்டவேண்டும்.
- ✓ 25 முதல் 30 நாட்கள் வயதுடைய பாசிபயறுக்கு இலைவழி ஊட்டசத்துதெளிப்பு செய்யவேண்டும். பயறுஒண்டர் (Pulse wonder) என்ற நூண்ணூட்டகலவையினை ஏக்கருக்கு 2 கிலோ என்ற அளவில் ஒட்டும் திரவம் கலந்து தெளிப்பு செய்யலாம் அல்லது 2% டிஏபிகரைசல் (ஒருலிட்டர் தண்ணீருக்கு 20கிராம்) தயார் செய்து தெளிப்பு செய்வதால் அதிக பூக்கள், காய்கள் உண்டாகி அதிக மகசூல் பெறவழி செய்கிறது.

**6. வடகிழக்கு மண்டலம்**

அடுத்து வரும் ஐந்து நாட்களிலும் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் பெரும்பாலான மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் நாட்களுக்கு இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 37°செமுதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 27°செ முதல் 29°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலைநேர காற்றின் ஈரப்பதம் 45 மற்றும் 60 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 6 கி.மீ முதல் 20 கி.மீவரையிலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ உழவர்கள் தற்போது உள்ள மண்ணின் ஈரத்தை பயன்படுத்தி கோடை உழவு செய்வதன் மூலம் மண் வளத்தை அதிகப்படுத்தலாம்.
- ✓ கொட்டகையின் மேற்பகுதியில் வைக்கோல் அல்லது தென்னக்கீத்து பரப்புவதன் மூலம் வெப்ப தாக்கத்தின் அளவை குறைத்து கொட்டகையின் உட்புறம் குளுமையாக வைத்துக் கொள்ளலாம்.
- ✓ உழவர்கள் கறவை மாடுகளில் வெப்பத்தாக்கத்தை குறைக்க வெயில் அதிகமாக இருக்கும் நேரத்தில் இரண்டு அல்லது மூன்று முறை தண்ணீர் தெளித்து உடல் வெப்பத்தை தணிக்க வேண்டும்.
- ✓ உழவர்கள் தங்களுடைய கறவை மாடுகளின் மடியை நன்றாக கழுவி மற்றும் உலர்த்தி பால்கறக்கவும். மேலும் பால் கறந்த பின்பு துசி அதிகமுள்ள உலர்தீவனம் அளிப்பதை தவிர்ப்பதன் மூலம் மடிவீக்க நோய் தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம்.

- ✓ தோட்டப்பயிர்களின் வேர் பகுதியில் தேங்காய் நார் கொண்டு மூடுவதன் மூலம் மண்ணின் ஈரத்தன்மையை பாதுகாக்கலாம்.

**7.அதிக மழை பெறும் மண்டலம்**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை31°செ ஆகவும் இரவுநேர வெப்பநிலை 26°செஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 85 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது காற்றின் வேகம் மணிக்கு 19 கி.மீவேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ மழை குறைவாக இருப்பதினால் வாழை, மிளகு, ஜாதிக்காய், கிராம்பு ஆகிய பயிர்களுக்கு நீர் பாய்ச்சவும்.
- ✓ வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.
- ✓ ரப்பர் : புதிதாக நடவு செய்யப்பட்ட ரப்பர் மர கன்றுகளுக்கு நீர்ப்பாய்ச்சவும்.
- ✓ மிளகு : மழை இருக்கும் பட்சத்தில் வேர் விட்ட மிளகு குச்சிகளை நடவு செய்யலாம்.


**பேராசிரியர் மற்றும் தலைவர்,**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்,**

**த.நா.வே.ப.கழகம்,கோவை.**